அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 29/95

எனது இல. 11/706 ஈ 206/56(32)
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
1995.09.22

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

**பயங்கரவாதம் நிலவுகின்ற பிரதேசங்களில் சிவில் நிருவாகத்தில் ஈடுபட்டுள்ள அரச பணியாளர்களுக்கான ஊக்குவிப்புப் படி.**

---

இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பயங்கரவாதம் நிலவுகின்ற மாவட்டங்களில் உள்ள பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் சிவில் நிருவாகத்தில் ஈடுபட்டிருக்கும் அரச பணியாளர்களுக்கு மாதாந்தச் சம்பளத்தின் 25% விதம் (படிகள் உள்ளடங்காத) ஊக்குவிப்புப் படியொன்றை மாதச் சம்பளத்துக்கு மேலதிகமாக வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

2. நிரந்தர சேவையில் அல்லாத பணியாளர்கள் தொடர்பில் அவர்கள் சேவையாற்றிய நாட்களை அடிப்படையாகக் கொண்டு இந்த 25% வீத படி வழங்கப்பட வேண்டும்.

3. கொடுப்பனவு செய்யப்படும் போது அந்தந்த அமைச்சுக்களுக்குரிய வளங்கள் கவனத்திற் கொண்டு பார்க்க வேண்டுமென்பதுடன் வேண்டிய மேலதிக நிதி ஒதுக்கீடுகள் மட்டும் பொதுத் திறைசேரியிடம் கோரப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு அமைச்சின் செயலாளரும் தனது நோக்கெல்லைக்குட்பட்ட நிறுவனங்கள் தொடர்பான கொடுப்பனவுகளை செய்யும் போது தனது தற்றுணிபின் படி சகல கொடுப்பனவுகளுக்குமாக அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் பாராளுமன்ற அமைச்சின் தாபனப் பணிப்பாளரின் சம்மதத்தைப் பெறல் வேண்டும்.

5. 1995.04.01 ஆந் திகதி தொடக்கம் 1995.12.31 ஆந் திகதி வரை மட்டும் இக் கொடுப்பனவு செயற்பட வேண்டும்.

6. பொதுத் திறைச்சேரியின் ஒத்திசைவுடன் இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

ஒப்பம்: ஆர். என். ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.